Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, NOVEMBER 24, 2023

வெள்ளிக்கிழமை நவம்பர் 24, 2023 | ஒளி: 09 கதிர் 135 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## சீனாவில் புதிய வைரஸ்

முழுச் செய்தி P7



# மூளையை பரிசோதனை | கூட்டமைப்பை தடை செய்க



வடக்கு தமிழ் அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டும் என்று கூச்சலிடும் சரத் வீரசேகரவின் மூளையை பரிசோதனை செய்ய வேண்டும் என ஜே.வி.பி. தலைவரும் எம்.பியுமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகங்களை ஒன்றிணைத்து தேசிய நல்லிணக்கம் உறுதி செய்யப்பட்டால் தான் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். இனவாத கருத்துக்களின் வெளிப்பாடுகளினால் தான் 30 வருட கால யுத்தம் நடந்தது.

ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு கட்டவிழ்த்து விட்ட இனவாதங்களினால் தான் இந்த நாடு 30 வருட கால யுத்தத்தை எதிர்கொண்டது.

தொடர்ச்சி P2

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாரிய தவறிழைத்துள்ளார். பிரபாகரனை அழித்தவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தடை செய்திருக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவின் அனுதாபம் இன்று பெரும் பூகம்பமாக உருவாகியுள்ளது என்று தேசியப் பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். ஹிட்லர், முசோலினி, சதாம் ஹுஸைன் ஆகியோர் அழிக்கப்பட்டதன் பின்னர் அவர்களின் அரசியல் செயற்பாடுகள், அரசியல் கட்சிகள் அழிக்கப்பட்டன. அதேபோல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தடை செய்திருக்க வேண்டும் என்றார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## "அச்சமின்றி விளக்கேற்றவும்"

வ.சக்தி



மாவீரர் நாள் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மட்டக்களப்பு மாவடிமுன்மாரியில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லம் துப்புரவு செய்யப்பட்டு, சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "இராணுவ குறைப்பு சாத்தியமாகாது"



பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இராணுவத்தினரது எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. இது ஒருபோதும் சாத்தியமாகாது என்று முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்பு என்பதற்காக வீட்டுக்கு ஜன்னல் மற்றும் கதவுகளை பொருத்தாமல் இருக்க முடியாது.எனவே பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டேயாக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தெற்கில் நினைவுகூர முடியுமாயின் வடக்கு, கிழக்கில் ஏன் முடியாது?



தெற்கில் ஏற்பட்ட கிளர்ச்சியின் மூலம் இறந்தவர்களை, அந்த தலைவரை தெற்கிலே நினைவு கூர முடியுமாக இருந்தால் ஏன் வடக்கு, கிழக்கில் நினைவு கூர முடியாது? என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாவட்ட எம்.பி. கோவிந்தன் கருணாகரம் கேள்வி எழுப்பினார். தொடர்ச்சி P2

## யாழில் சட்டக்கல்வி தமிழிலும் வேண்டும்

### சிங்களமயமாகும் யாழ். பல்கலைக்கழகம்: விரிவுரையாளர் எச்சரிக்கை

நிதர்ஷன் வினோத்

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்வி மும்மொழிகளிலும் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்படுகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சட்டத்துறையில் ஆங்கிலமொழி மூலத்தில் மட்டும் நடத்தப்பட்டு வருகின்றது, தொடர்ச்சி P2

## "உங்களுக்கு மட்டுமல்ல எனக்கும் தெரியவில்லை"



அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சித்தார்த்தன் பரிந்து ரைக்கப்பட்டு அவரை நானும் நீங்களும் ஏற்றுக் கொண்டுள்ளபோதும் அவர் ஏன் இதுவரை நியமிக்கப்பட வில்லை என்பது உங்களுக்கு மட்டுமல்ல எனக்கும் தெரியவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) அரசியலமைப்பு பேரவை தொடர்பில் இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்களின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு பேரவை தொடர்பில் ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களின் போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான ஹர்ஷ டி சில்வா,அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி.யான தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சி P2

## பாலியல் இலஞ்சம் கேட்ட பொலிஸ் அதிகாரி கைது

கனகராசா சரவணன்

கல்முனையில் பெண்ணொருவரிடம் பாலியல் இலஞ்சம் கோரிய 59 வயதுடைய பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் விடுதியொன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கொழும்பைச் சேர்ந்த அதிகாரிகள், புதன்கிழமை (22) கைது செய்துள்ளனர்.

கல்முனை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பெண்ணொருவர், குற்றச் செயல் ஒன்றுக்காக கைது செய்யப்பட்டு நிபந்தனை பிணையில் நீதிமன்றத்தால் விடுதலைச் செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## ஜூலி சங்கின் தலையீடு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நாட்டின் உள்ளக விவகாரங்கள் தலையிடுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். ஆகவே உரிய நடவடிக்கை எடுங்கள் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் வலியுறுத்தினேன் என தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். தொடர்ச்சி P2

## 'லஞ்ச் ஷீட்' அதிபருக்கு இடமாற்றம்



லஞ்ச் ஷீட்டில் உணவு கொண்டு வந்த மாணவர்களுக்கு லஞ்ச் ஷீட்டை உண்ணக் கொடுத்த பாடசாலை அதிபருக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்த்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாவலப்பிட்டி-ரம்புக்பிட்டிய மகா வித்தியாலயத்தில் பொலித்தீன், லஞ்ச் ஷீட் தடைசெய்யப்பட்ட நிலையில், லஞ்ச் ஷீட்டில் உணவு கொண்டு வந்த மாணவர்கள் சிலரை அவர்கள் உணவு கொண்டு வந்த லஞ்ச் ஷீட்டை உண்ணுமாறு அதிபர் வற்புறுத்திய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை நடத்த பணித்தேன். சம்பவம் தொடர்பில் பஸ்பாகே வலயக் கல்விப் பணிப்பாளரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மூளையை பரிசோதனை | கூட்டமைப்பை தடை
# செய்க

**இனவாதத்தை பரப்பி அதன் ஊடாக தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே தொடர்ந்து முயற்சிக்கிறார்கள்.**

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் இனங்களுக்குகிடையில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டும் என்று கூச்சலிடும் அரச தரப்பு எம்.பி.யான சரத் வீரசேகரவின் மூளையை பரிசோதனை செய்ய வேண்டும்.

இவர்கள் ஒருபோதும் தேசிய நல்லிணக்கத்தை எதிர்பார்க்கவில்லை. இனவாதம் தோற்றம் பெறும் வகையில் தான் கருத்துக்களை தெரிவிக்கிறார்கள். இனவாதத்தை பரப்பி அதன் ஊடாக தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். வடக்கு மற்றும் தெற்கில் அரசியல் தீர்வுகளுக்கு முன்னர் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம் என்றார்.

நாட்டை பிளவுபடுத்த ஆயுதமேந்திய பயங்கரவாதிகளை நினைவுகூருவதற்கு அனுமதி வழங்குவது அனுதாபமல்ல அது கோழைத்தனம் என கடும் விசனம் வெளியிட்ட

அவர், இலங்கையில் புலிகள் அமைப்பை அழித்திருந்தாலும். புலிகளின் கொள்கையுடையவர்கள் சர்வதேச மட்டத்தில் துடிப்புடன் செயற்படுகிறார்கள். எனவே இலங்கையில் மீண்டும் யுத்தம் ஒன்று தோற்றம் பெற்றால் அதனை எதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராக இருக்க வேண்டும் என்றார்.

உலகத்தில் மிகவும் கொடிய பயங்கரவாத அமைப்பாகக் கருதப்பட்ட விடுதலைப் புலிகளை அழித்துள்ளோம் . இலங்கையில் புலிகள் அமைப்பை அழித்திருந்தாலும், புலிகளின் கொள்கையுடையவர்கள் சர்வதேச மட்டத்தில் துடிப்புடன் செயற்படுகிறார்கள். இலங்கையில் மீண்டும் யுத்தம் ஒன்று தோற்றம் பெற்றால் அதனை எதிர்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராக உள்ளார்களா ? என்பதை ஆராய வேண்டும்.

யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் விசா வழங்க மருத்துள்ளன. இராணுவ அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் தாக்கம் செலுத்தியுள்ளது.

இந்நிலை தற்போதை இராணுவ அதிகாரிகளுக்கும் சேவை ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

மாவீரர் தினம் பற்றி தற்போது பேசப்படுகிறது. நாட்டை பிளவுபடுத்த ஆயுதமேந்திய பயங்கரவாதிகளை நினைவுகூருவதற்கு அனுமதி வழங்குவது அனுதாபமல்ல அது கோழைத்தனமானது என்பதைப் பகிரங்கமாகக் குறிப்பிடுவேன்.

மாவீரர் தினம் என்று குறிப்பிட்டுக் கொண்டு இல்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிக்கத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும், ஏனைய தமிழ் அரசியல் தரப்பினரும் முயற்சிக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் தமிழர்களைப் பணயக் கைதிகளாக வைத்திருந்த போது இவர்கள் எங்குச் சென்றார்கள்? 2இலட்சத்து 95 ஆயிரம் பேரை இராணுவத்தினர் மீள்குடியேற்றம் செய்தார்கள். 8000 தமிழர்களுக்கு இராணுவத்தினர் தமது சொந்த நிதியில் வீடு கட்டிக் கொடுத்தார்கள். அப்போது கூட்டமைப்பினர் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசிக் கொண்டு வரவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது. கூட்டமைப்பினர் பாராளுமன்றத்துக்கு வருகை தந்து பதவி பிரமாணம் செய்வதற்கு முன்னர் பிரபாகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்கள் என்றார்.

## "அச்சமின்றி விளக்கேற்றவும்"

கடந்த காலத்தில் நாம் மிகவும் இக்கட்டான சூழலிலும், பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், மாவீரர் நாளை அனுஷ்டித்து வந்தோம். இந்நிலையில், இவ்வருடம் எந்தவித அச்சுறுத்தல்களும் இல்லாத சூழல் உள்ளது. எனினும் இம்முறை மாவீரர் நாளை அனுஷ்டிக்க பொலிஸார் தடையுத்தரவைப் பெறுவதற்கு முயற்சித்தபோதும், அதனை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே இம்முறை மக்கள் அனைவரும் எந்தவித அச்சங்களுமின்றி எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 06.05மணிக்கு உங்களுக்குப் பக்கத்திலே அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லத்திற்குச் சென்று எமது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் போராடி ஆயுதியான மாவீரர்களைச் சுடர் ஏற்றி, கண்ணீர் வணக்கம் அஞ்சலி செலுத்துவது ஒவ்வொரு தமிழ் மகனினதும் கடமையாக இருக்கின்றது.

எனவே, இந்நாளை ஒரு புனித நாளாகக் கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து அஞ்சலி செலுத்த வருமாறு அழைப்பு விடுக்கின்றோம் என்றார்.

## ஜூலி சங்கின் தலையீடு...

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கு ஆதரவாக செயற்படுபவர்களுக்காக பொலிஸாரை காட்டிக் கொடுக்க முடியாது என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசியப் பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். குழுவின் அனுமதியுடனேயே 3 முக்கிய பரிந்துரைகளைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் முன்வைத்தேன்.

சந்திம வீரக்கொடி தேசியப் பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் உறுப்பினராக பதவி வகிக்கிறார். ஆனால், அவர் குழுவின் செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படுகிறார். குழுவில் முன்னிலையாகும் அரச அதிகாரிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுகிறார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நாட்டின் உள்ளக விவகாரங்கள் தலையிடுவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் ஆகவே, உரிய நடவடிக்கை எடுங்கள் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் வலியுறுத்தினேன்.

அமெரிக்கத் தூதுவருக்கு சார்பாக செயற்படும் சந்திம வீரக்கொடி போன்றவர்களுக்காக பொலிஸாரை காட்டிக் கொடுக்க முடியாது. தேசியப் பாதுகாப்பு தொடர்பில் அடிப்படை அறிவில்லாத சந்திம வீரக்கொடி தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் உறுப்பினராக உள்ளதால் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எனவே, குழு உறுப்பினர் பதவியிலிருந்து அவரை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்துகிறேன் என்றார்.

## யாழில் சட்டக்கல்வி...

யாழ். பல்கலையில் தமிழ்மொழி மூலத்தில் சட்டக்கற்கையை உட்புகுத்த ஏன் முடியாது? என்று யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினருமான ம.இளம்பிறையின் கேள்வியெழுப்பினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தமிழ் மக்களினுடைய பண்பாட்டு, பாரம்பரிய விழுமியங்களைப் பாதுகாக்கின்ற பல்கலைக்கழகமாக இருக்கின்ற நிலையைச் சிதைத்து, சிங்கள மாணவர்களையும் புகுத்துவதற்காக ஆங்கிலமூல கற்கைநெறி புகுத்தப்படுகின்றது.

வடக்கு, கிழக்கிலே புதிய பல்கலைக்கழகங்களைத் தொடங்குதல் எனும் பெயரில் ஏற்கெனவே பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்குகின்ற வளாகங்களைப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்த விண்ணப்பிக்கும் போது அரசும் மிக அவசரமாக அதற்கு அனுமதி வழங்குகின்றது. ஆனால், தென்பகுதியில் எந்தவொரு பல்கலைக்கழகங்களையும் தொடங்குவதற்கு அரசாங்கம் அனுமதியை வழங்குவதில்லை, காரணம் வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களின் தமிழ் சாயத்தைச் சிதைத்து, தமிழ்ப் பண்பாட்டைச் சிதைத்து, பெரும்பான்மை சிங்கள மாணவர்களை இங்கு அனுமதிப்பதன் ஊடாக தமிழ் மக்களின் பல்கலைக்கழகங்கள் மீதான ஏகபோகங்களைச் சிதைப்பதைத்தான் அரசு செய்கின்றது என்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானபீடம், முகாமைத்துவ பீடம், மற்றும் கிளிநொச்சியிலுள்ள பீடங்களில் பெரும்பான்மையாக சிங்கள மாணவர்கள் காணப்படுகின்றனர். எமது தமிழ் மாணவர்கள் கல்வி பயில்வதற்காக யாழ். பல்கலைக்கழகத்திலே தொடங்கப்பட்ட கற்கைநெறிகள் எமது மாணவர்களுக்கு வசதி கிடைக்காமல், மாற்று மாணவர்களிற்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்ப் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் என்ற பெயரைக் காப்பாற்ற வேண்டுமென்றால் சகல கற்கைநெறிகளும் தமிழ்மொழியிலும் போதிக்கப்பட வேண்டியது அவசியமாகும். கலைப்பீட கற்கை நெறிகளைக் கூட ஆங்கில மொழியில் கற்பிக்க வேண்டும் என்ற அழுத்தத்தினை அரசாங்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக எமது பல்கலைக்கழகத்திற்கு வழங்கி வருகின்றது. இருப்பினும் பாரிய எதிர்ப்பின் காரணமாக அந்த முயற்சி கைகூடாமல் இருக்கின்றது.

சிங்கள மொழி மாணவர்கள் பெரும்பான்மையாக இருப்பதைக் காரணம் காட்டி சிங்கள ஆளணி நியமனத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை உருவாகி வருகின்றது. ஏன் சட்டத்துறையில் கூட சிங்கள சுதந்தர விரிவுரையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர்களை நியமிக்கக்கூடாதென்று யாரும் சொல்லவில்லை, ஆனால், அது எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பாக மாறும் என்பதை நாங்கள் மறுக்க முடியாது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிங்களமயமாகும் என்பதற்கான அபாய எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

## "இராணுவ குறைப்பு சாத்தியமாகாது"

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், தேசியப் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது. ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் தமது குறுகிய தேவைகளுக்காகத் தேசியப் பாதுகாப்பினை பலவீனப்படுத்தின. இதன் பெறுபேறு ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

2024ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறையில் முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளுக்கு 423 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை விட இம்முறை 12 பில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இராணுவத்துக்கு 218 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாதுகாப்புத்துறைக்கு அதிக நிதி ஒதுக்குவது அவசியமற்றது என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். பொருளாதார பாதிப்பு என்பதற்காக வீட்டுக்கு ஜன்னல் மற்றும் கதவுகளைப் பொருத்தாமல் இருக்க முடியாது.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இராணுவத்தினரது எண்ணிக்கை திடீரென குறைவடைந்துள்ளது. இறுதிக் கட்ட யுத்தத்தின்போது, 2 இலட்சமாக காணப்பட்ட இராணுவத்தினரது எண்ணிக்கை தற்போது 1,53,000 ஆக உள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இராணுவத்தினரது எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. இது ஒருபோதும் சாத்தியமாகாது.

நவீன உலகுக்குப் பொருந்தும் வகையில் இராணுவத்துக்கு ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போதைய நிலையில், பயன்படுத்த முடியாத யுத்த தாங்கிகளே இராணுவத்திடம் உள்ளன. விமானப்படையிடம் ஒரு ஜெட் விமானம் மாத்திரமே உள்ளது. ஆகவே இம்முறை புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

தற்போது தேசியப் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தினருக்கும், ஏனைய மக்களுக்கும் இதுவரை நியாயம் கிடைக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு யார் முக்கிய சூத்திரதாரி என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம். எனக்கு வாய்ப்பு கிடைத்தால் சூத்திரதாரிகளையும், கடமைகளைத் தவறவிட்டவர்களையும் நிச்சயம் சிறைக்கு அனுப்புவேன் என்றார்.

## தெற்கில் நினைவுகூர முடியுமாயின் வடக்கு,கிழக்கில் ஏன்? முடியாது

இதேவேளை, தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் கட்டிடங்களை, பொலிஸார் உடைத்துள்ளமை காட்டுமிராண்டித்தனமானது என கடுமையாகச் சாடினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்ற 2024 ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர்களை நினைவு கூர எந்தத்தடையும் இல்லை... ஆனால், தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் கட்டிடங்களை பொலிஸார் தற்போது உடைப்பதாக அறிந்தேன் இந்த நடவடிக்கை பாதுகாப்புப் படையினரின் காட்டுமிராண்டித்தனம். இதனை ஏற்க முடியாது என்றார்.

தன்னுடைய குழந்தையை, சகோதரனை, கணவனை இழந்தவர்கள் தங்களின் உறவுகளை நினைத்து அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி ஒரு வருடத்துக்கு ஒருமுறை பூஜை செய்யும் இடமாகவே அவர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களைப் பார்க்கின்றார்கள்.

தெற்கில் ஏற்பட்ட கிளர்ச்சியின் மூலம் இறந்தவர்களை, அந்த தலைவரை தெற்கிலே நினைவு கூற முடியுமாக இருந்தால் ஏன், வடக்கு, கிழக்கில் நினைவு கூர முடியாது?

எந்த ஒரு நாட்டிலும் உள்நாட்டு யுத்தமொன்றில் இறந்த ஒரு பொது மகனை நினைவு கூருவதற்கு எந்த ஒரு தடையுமில்லை. உள்நாட்டுச் சட்டங்கள் மாத்திரமல்ல சர்வதேச சட்டங்களும் இதற்குச்சாதகமாகவே உள்ளன

மேலும், யுத்தத்தில் இறந்த பொது மகன் மாத்திரமல்ல யுத்தத்தில் ஒரு தரப்பாக இருந்து யுத்தம் புரிந்த ஒரு மகனைக்கூட நினைவு கூருவதற்கு அவனது உறவுகளுக்கு, அவனது நட்புகளுக்கு, அவனது இனத்துக்கு உரிமையுள்ளது. இதனைத் தடைசெய்ய எந்த ஒரு சட்டமும் இல்லை என்றும் கூறினார்.

## "உங்களுக்கு மட்டுமல்ல...

ஆனால், அவரை அந்த பதவிக்கு சபாநாயகர் நியமிக்காமல் இருக்கிறார் என்றார்.

இதற்கு ஜனாதிபதி பதிலளிக்கையில், அது சபாநாயகரின் தவறு அல்ல. எதிர்க்கட்சியிலிருந்து சில குழுக்கள் வேறு பெயர்களைப் பரிந்துரைத்திருக்கின்றன. அதனால் அதனை அவர்கள் தீர்த்துக்கொள்ள வேண்டும். அந்த குழுக்கள் உங்களுடன்தான் இணைந்து செயற்படுகின்றன. அதனால் இது அரசாங்கத்தின் பிரச்சினை அல்ல. எதிர்க்கட்சியே இதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

மீண்டும் எழுந்த ஹர்ஷ டி சில்வா எம்.பி., தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியில் இருக்கும் பிரதான ஒரு கட்சி. அவர்கள்தான் சித்தார்த்தன் எம்.பியை பரிந்துரை செய்திருக்கிறார்கள். அப்படியாயின், ஏன் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கேட்டார்.

இதற்கு ஜனாதிபதி பதிலளிக்கையில் இது தொடர்பில் எனக்கு பதில் வழங்க முடியாது. எதிர்க்கட்சியில் இருக்கும் வேறு சில குழுக்களே அவர்களில் ஒருவரின் பெயரை பரிந்துரைத்திருக்கின்றன என்றார்.

அந்த குழு யார் என சொல்லுங்கள் என ஹர்ஷ டி சில்வா எம்.பி கேட்டார்.எனக்கு அது தெரியாது. சபாநாயகரிடமே கேட்கவேண்டும். இது எதிர்க்கட்சிகளின் பிரச்சினை. நான் யாருடைய பெயரையும் பரிந்துரைக்கவில்லை என்று ஜனாதிபதி கூறினார். அதற்கு ஹர்ஷ எம்.பி. எதிர்க்கட்சியில் இருந்து சித்தார்த்தனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அதனை நியமித்தால் பிரச்சினை முடிந்துவிடும். அதனை சபாநாயகரே செய்ய வேண்டும்.. அதனால் இது எதிர்க்கட்சியின் பிரச்சினை என தெரிவிக்க வேண்டாம் என்றார்.

## பாலியல் இலஞ்சம் கேட்ட பொலிஸ் அதிகாரி கைது

மாதத்தில் ஒருநாள் நீதிமன்றம் சென்று கையெழுத்து இட்டுவரும் அப்பெண்ணிடம், அங்கு கடமையாற்றி வரும் கல்முனை பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த 59 வயதுடைய பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் பாலியல் இலஞ்சம் கேட்டுள்ளார்.

இதுதொடர்பில், கொழும்பில் உள்ள ஆணைக்குழுவுக்கு அறிவித்ததை அடுத்து, அவர்களின் வழிகாட்டலின் கீழ், கல்முனை கடற்கரை பகுதியிலுள்ள உல்லாச விடுதியொன்றில், ஆணைகுழுவின் அதிகாரிகள், மாறுவேடத்தில், புதன்கிழமை (22) காலை கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அப்பெண்ணும், பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரை விடுதிக்கு அழைத்துள்ளார். அவர் வந்தபோது, அதிகாரிகள் அவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர், அம்பாறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவரை 28 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதை அடுத்து குறித்த பொலிஸ் அதிகாரியை அதிகாரிகள் கொழும்புக்கு அழைத்துச் சென்றனர்.

## 'லஞ்ச் ஷீட்' அதிபருக்கு...

நடைபெற்று வரும் விசாரணைகளின் அடிப்படையில் உடன் நடைமுறைகக்கு வரும் வகையில் குறித்த பாடசாலை அதிபர் கம்பளை வலயக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றார்.

## நாட்டின் பாதுகாப்புக்கு

# “ஆட்சியாளர்களே அச்சுறுத்தல்”



எமது நாட்டின் பாதுகாப்புக்கு அந்நிய நாடு மற்றும் அயல்நாடு ஒன்றின், நாற்புறமும் கடல் சூழ்ந்துள்ளதால் எல்லைப்புற நாடு ஒன்றின் அச்சுறுத்தலுமில்லை. எமது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எமது நாட்டின் ஆட்சியாளர்களே என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான குழு நிலை விவாதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மயிலத்தமடு - மாதவணை மேய்ச்சல் நிலம் தொடர்பாக அதில் அத்துமீறியவர்கள் தொடர்பாக ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம் தீர்ப்பொன்றினை வழங்கியுள்ளது.

இந்தத்தீர்ப்பினை அமுல்படுத்த வேண்டியது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கடமை. ஆனால், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நீதிமன்றத் தீர்ப்புக்குச் சவால் விடுபவராகவே அன்றும் இன்றும் உள்ளார்.

எந்தவோர் அந்நிய நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுமில்லாத எம் நாடு பெரும் தொகையை ஒதுக்கியுள்ளது. இத்தனைக்கும் யுத்தம் நிறைவுக்கு வந்தது. நாட்டில் அமைதி ஏற்பட்டது.

ஆனால், யுத்தத்துக்கான காரணம் இன்னமும் களையப்படவில்லை. அதனைக் களைய ஆட்சியாளர்களுக்கும் விருப்பமில்லை. ஆட்சியாளர்களுக்குப் பிச்சைக்காரன் புண்ணைப்போல ஆட்சிக் கட்டிலைப் பிடிப்பதற்கு இப்பிரச்சினை தேவை என தெரிவித்துள்ளார்.



# ஆளுநர் சார்ள்ஸின் தாயார் காலமானார்

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸின் தாயாரான மேரி ஜோசபின் அமிர்தரத்தினம் 21ஆம் திகதியன்று கொழும்பில் இயற்கை எய்தினார். இறக்கும் போது அவருக்கு வயது 93 ஆகும்.

இவர், மறைந்த அமிர்தரத்தினத்தின் அன்பு மனைவியும், பி.எஸ்.எம். சார்ள்ஸின் (வட மாகாண ஆளுநர்) பாசமிகு தாயாரும், ஜோசப் சார்ள்ஸின் (உதவி இயக்குநர்-அக்ரி) மாமியாரும், கிறிஸ் ஹாரிஸ் (Chris Harris), ஸ்டெபனி சிந்தியா (Stephanie Cynthia), குயின்சி சேனோபியா (Quincy Zenobia), ஜெரோமி செல்சியா (Jeromy Celcia), நான்சி கைல் (Nancy Gyle), ஷெரினா ரோஸ்கா (Sherina Roska), வீனஸ் எவங்கலின் (Venus Evangaline) ஆகியோரின் அன்பு பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை எல்விட்டிகல மாவத்தை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, வெள்ளிக்கிழமை (24) பிற்பகல் 2.00 மணிக்கு பொரளை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

## குடியிருப்புக்குள் சரிந்த மண்மேடு

■ ஆ. ரமேஷ்



உடபுஸ்ஸலாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோடன் தோட்ட பகுதியில் அமைந்துள்ள பௌத்த விகாரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குடியிருப்பு மீது புதன்கிழமை (22) மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

மண்மேட்டில் இருந்த பாரிய கற்கள் குடியிருப்பின் ஒரு பக்க சுவர் மீது சரிந்து வீழ்ந்தமையால், குடியிருப்புக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வனர்த்தம் ஏற்பட்ட வேளையில், பௌத்த பிக்குகள் குடியிருப்பில் இருந்த போதிலும், அவர்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என உடபுஸ்ஸலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கஞ்சா நபருக்கு விளக்கமறியல்

■ எம்.எப்.றிபாஸ்

அக்கரைப்பற்று - பதூர்நகர் பிரதேசத்தில் 324 கிராம் மற்றும் 94 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபரை டிசெம்பர் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நபரொருவர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, குறித்த பிரதேசத்திற்குச் சென்ற பொலிஸார், அந்த நபரைக் கைது செய்து வியாழக்கிழமை (23) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.



## பசுக்களை கடத்தியவர் கைது



சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக மாடுகளை வாகனத்தில் கடத்திச் சென்ற நபரொருவர் யாழ்ப்பாணம் - மண்டைதீவில் வைத்து புதன்கிழமை (22) கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மண்டைதீவு சோதனைச் சாவடியில் வைத்து தென்னிலங்கையைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகனத்தில் இருந்து நான்கு பசு மாடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இடியனுடன் ஒருவர் கைது

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு - கொக்குளாய் கிழக்குப் பகுதியிலுள்ள வீடொன்றைப் புதன்கிழமை (22) மாலை 5 மணியளவில் சோதனை செய்த பொலிஸார், இடியன் துப்பாக்கியுடன் 32 வயதானவரைக் கைது செய்துள்ளனர்.



பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

HOUSE FOR RENT
COLOMBO 5
3 Bed, 4 Bath, AC rooms, Hot water, Fully equipped kitchen, Rooftop bar & kitchen, 1 Car garage, Washer, Partially furnished with servant quarters. 2000 SQFT.



(077) 780 2614 +94 (76) 611 5606 RENT 175k Negó.

## மாணவி துஷ்பிரயோகம்; இளைஞன் கைது

■ செ.கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பில் பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - தேவிபுரத்தில் வசிக்கும் 13 வயதுடைய சிறுமியைக் காணவில்லையென சிறுமியின் தாயார் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் சனிக்கிழமை (18) முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், முல்லைத்தீவு - தீர்த்தக்கரை பகுதியில் வைத்துக் குறிப்பிட்ட சிறுமியையும் இளைஞனையும் கைது செவ்வாய்க்கிழமை (21) செய்துள்ளனர்.

பின்னர் சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், மருத்துவ பரிசோதனைகளில் சிறுமி பாலியல் துஷ்பியோகம் செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனை தொடர்ந்து, இளைஞனை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது டிசெம்பர் 5ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



## விவாக பண்டிகை கொட்டாஞ்சேனை



ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ணா ஆலயத்தில் இம்மாதம் 26ஆம் திகதி துளசி-சாளக்கிராமம் விவாக பண்டிகை கொண்டாடப்படும்.

துளசி-சாளக்கிராமம் விவாகம் வருடந்தோறும் பக்தர்களால் கொண்டாடப்படும் ஒரு புனிதமான பண்டிகையாகும். இந்துக்களால் புனிதமாக வழிபடப்படும் துளசிக்கும் பகவான் விஷ்ணுவின் ஓர் அம்சமான சாளக்கிராமுக்கும் நடைபெறும் விவாக நிகழ்வு இந்த பண்டிகையாகும்.

துளசி என்ற சொல்லுக்குத் தன்னிகரற்றது என்று பொருள். துளசி பூஜை செய்வதால் எட்டுவகை செல்வங்களும் கிட்டும். திருமணமாகாத பெண்களுக்குத் திருமணம் கைகூடும். சுமங்கலிகள் சுகமுடன் நீடூழி வாழ்வர் என்பது நம்பிக்கை.

மகாலட்சுமி சொரூபமான துளசி இருக்கும் இடத்தில் மகாவிஷ்ணு வாசம் செய்வார். அதனால் துளசிக்கு விஷ்ணுப்ரியா, ஹரிப்ரியா என்ற பெயர்களும் உண்டு. கார்த்திகை மாதத்தில் ஏகாதசிக்கு அடுத்த நாள் துளசி தேவியை மகாவிஷ்ணு மணந்ததாகப் புராணம் கூறுகிறது.

MUNICIPAL COUNCIL GAMPAHA

# கம்பஹா மாநகர சபை

## 2024 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்

2024 ஆம் ஆண்டிற்கான, இந்த மாநகராட்சியின் திட்டங்களை நிறைவேற்றும் வகையில் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்வதற்காக பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (ICTA) 2024 2024 ஆம் ஆண்டிற்கான பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் இருந்து 2023.11.24 01ஆம் திகதியில் இருந்து 2023.12.20 ஆம் திகதி வரை விலைமனுக்கோரல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல் 2024** என தெளிவாக குறிப்பிடப்பட்டு **“கம்பஹா மாநகர சபையின் நகர ஆணையாளர்”** பதிவு தபால் மூலம் அல்லது தனிப்பட்ட முறையில் நேரில் வந்து கையலிக்கலாம் அல்லது நகர ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள டெண்டர் பெட்டியில் குறிக்கப்பட்ட தினத்தில் குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பு பெட்டியில இடவும் முடியும். குறிக்கப்பட்ட தினத்திற்கு பிறகு விண்ணப்பிக்கும் அல்லது தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது என்பதுடன் தபாலில் அனுப்பும் போது காணாமல் போதல் அல்லது விடுபட்ட விண்ணப்பங்களுக்கு இந்த சபை பொறுப்புக் கூறமாட்டாது.

மேலும், ஒப்பந்தக்காரராகப் பதிவுசெய்யக்கூடிய நோக்கங்கள் மற்றும் தரங்களுக்கான பதிவு வரம்புகள் தொடர்பான பதிவுக் கட்டணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு மேற்பட்ட மேலதிக வேளைகளுக்குகாக (அலுமினியம் மற்றும் இரும்பு மரத்தாலான) குறைந்தபட்ச பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டும். இந்தக் கட்டணத்தைச் செலுத்திய பிறகு, கணக்குத் துறையால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பெறலாம், அதன் மூலம் பதிவுக்கு விண்ணப்பிக்கலாம்.

| ஒப்பந்தக் குழு | தரம் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| கட்டிடங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு. | C - 10 | ரூ.3000.00 |
| சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் | C - 9 | ரூ.3500.00 |
| பாலம் / மதகு / கால்வாய் அமைப்பு கட்டுமானம் | C - 8 | ரூ.4000.00 |
| அலுமினிய வேலை செய்தல் | C - 7 | ரூ.4500.00 |
| இரும்பு வேலை செய்தல் | C - 6 | ரூ.5000.00 |
| மரவேலை வேலை செய்தல் | C - 5 | ரூ.5500.00 |
| நிலப்பரப்பு (landscaping) அழங்கார வேலை | C - 4 | ரூ.6000.00 |
| | C-3 | ரூ.6500.00 |

**நிபந்தனைகள்:**

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாக வெளி ஒப்பந்தக்காரர்கள் அல்லது நிறுவனங்களிடமிருந்து ஏல விலை ஒப்பீடுகளுக்கு அழைப்பு விடுக்கும் உரிமை சபைக்கு உள்ளது.

**லோச்சனா பாலசூரியா**
**அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி**
**கம்பஹா மாநகர சபை**
**2023.11.22**

# மனிதாபிமான நடவடிக்கையும் நினைவு கூரலை தடுத்தலும்

பல்லினங்களைச் சேர்ந்தவர்கள் வாழும் நாட்டில், சகலருக்கும் சமமான உரிமைகள் வழங்கப்படவேண்டும். இல்லையேல், அந்நாட்டின் ஜனநாயகம் கேள்விக்குள்ளாகும்.நமது நாட்டை பொறுத்தவரையில், பல இனங்கள், மதங்களைச் சேர்ந்தவர்களும் பல மொழிகளைப் பேசுவோரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எனினும், 'சகலருக்கும் சமம்' என்பதை எதிர்பார்க்கவே முடியாதுள்ளது.

தமிழீழ புலிகளுடன் இடம்பெற்ற மோதல், நிறைவுக்கு வந்து 14 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தோரின் குரல்வளைகள் நசுக்கப்படுகின்றனவே தவிர, அம்மக்களின் குரல்களுக்கு எத்தரப்பும் செவிசாய்ப்பதாக இல்லை. இதனால், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான குரல்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

புலிகளுடன் இறுதி யுத்தம் 2009இல் முன்னெடுக்கப்பட்டபோது, அன்றிருந்த அரசாங்கம், "மனிதாபிமான நடவடிக்கை" என்றே விளித்தது. அதாவது, புலி பயங்கரவாதிகளால் மனித கேடயங்களாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் சாதாரண மக்களை மீட்டெடுக்கும் நடவடிக்கையாகும் என விபரிக்கப்பட்டது.

அன்றைய அரசாங்கம் கூறியிருந்ததைப்போல மனிதாபிமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தால், புலிகளும் மரணமடைந்தனர். சாதாரண மக்களும் கொல்லப்பட்டனர். புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை, கிளைமோர் குண்டுத்தாக்குதல்கள் மற்றும் விமானத் தாக்குதல்களால், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், சாதாரண பொதுமக்கள், படைத்தரப்பினர் கொல்லப்பட்டனர்.

வடக்கு, கிழக்கில் நிர்மாணிக்கப்பட்ட மாவீரர் துயில் இல்லங்கள், 2009க்குப் பின்னர் புல்டோசர்களைக் கொண்டு முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டன. தென்னிலங்கையில், நினைவுத்தூபிகள் நிர்மாணிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும், நினைவு நாள் அனுஷ்டிப்பு, அரசாங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் உயிரிழந்தவர்களை, தங்களுடைய உறவினர்கள் நினைவுகூர்வதற்கு பல்வேறு வகையிலும் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

நினைவு கூரலுக்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறு அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் நிலையங்களால் முன்வைக்கப்பட்ட தடையுத்தரவு கோரிக்கையை நிராகரித்துள்ள நீதிமன்றங்கள் பல, நினைவு கூரலுக்கான உரிமையை மதித்து, இடையூறுகளை ஏற்படுத்தவேண்டாமென அறிவுறுத்தியுள்ளன.

எனினும், நினைவுகூரலுக்காக அலங்கரிக்கப்பட்ட கொடிகள் விஷமிகள் சிலரால், அறுத்தெறியப்பட்டுள்ளன. இது, தங்களுடைய உறவினர்களை இழந்து பாதித்து, மனம் நொந்துபோயிருப்போரின் மனங்களில், இரும்பை உருக்கி ஊற்றுவதைப் போலவே இருக்கும். என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

நினைவுகூரலைத் தடுப்பதன் ஊடாக, ஏன்? எதற்காக? நினைவுகூர்ந்தால் என்னவென, அங்கிருக்கும் சாதாரண மக்களிடத்தில், சிறுவர், இளைஞர்களிடம் கேள்விகளை எழும்பும். இதுவே அடுத்தடுத்த வருடங்களில் நினைவுகூரல் நிகழ்வுகளை மிகச்சிறப்பாக முன்னெடுக்க வழிசமைக்கும். தென்னிலங்கையில் தங்களுடைய இருப்பை காப்பாற்றிக்கொள்வதற்காக, இனவாதத்தைக் கக்குவோர் இன்றும் இருக்கின்றனர். இது, தென்னிலங்கையைச் சேர்ந்த சிறார்களிடன் நஞ்சை விதைக்கும். இவை, சிறார்களின் மத்தியில் பிரிவினையைத் தோற்றுவிக்கும். பல்லினங்கள் வாழும், நமது நாட்டில் நல்லிணக்கம் கேள்விக்குறியாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாகச் சம்பவித்து விடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டு விடுகின்றது. சில சமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்து விடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும். தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

நன்றி: பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் 28:

# ஸ்ரீ எதிர்ப்பு போராட்டம்: சிறுபிள்ளை வேளாண்மை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பண்டா - செல்வா உடன்படிக்கை ஊசலாடிக்கொண்டிருந்த நிலையில், அதற்கெதிராக ஜே.ஆர்.ஜயவர்த்தன முன்னெடுத்த கண்டி யாத்திரையானது பிரதமர் பண்டாரநாயக்கவுக்கு மிக நெருக்கமான அரசியல்வாதியான எஸ். டி.பண்டாரநாயக்கவின் தலைமையில் பொதுமக்களின் பேராதரவுடன் முறியடிக்கப்பட்டது. இவ்வாறு சிங்கள முற்போக்கு சக்திகள் இவ்வுடன்படிக்கையைத் தக்கவைக்க தம்மாலானதைச் செய்த வண்ணமிருந்தனர். மறுபுறம் உடன்படிக்கையை வெற்றிகரமாக முன்னெடுக்கத் தமிழ் தரப்பினரின் முழுமையான ஆதரவு தேவைப்பட்டது. ஆனால் அது நிகழவில்லை.

தமிழ் மக்களின் மொழியுரிமைக்கும் பிரதேச உரிமைக்குமான சில குறைந்தபட்ச உத்தரவாதங்களை நிலை நிறுத்தத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. சிங்கள பேரினவாதிகள் தென்னிலங்கையில் பண்டா-செல்வா உடன்படிக்கையை இல்லாதொழிக்க முயன்ற வேளையில், வடக்கில் தமிழ் காங்கிரஸ் அந்த உடன்படிக்கையைத் தீவிரமாக எதிர்த்தது. தமிழரசுக் கட்சித் தலைமை ஓரளவு விட்டுக் கொடுப்புடன் நடந்து கொள்ளவேண்டிய அந்த வேளையில், பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்துக்கு சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறித்த பஸ்களை அனுப்ப முடிவெடுத்ததால், வடக்கில் 'ஸ்ரீ' என்ற எழுத்துப் பொறித்த அனைத்து இலக்கத் தகடுகளிலும் அச்சிங்கள எழுத்தின் இடத்தில் தமிழ் எழுத்தைப் பொறிக்கும் போராட்டமொன்று அக்கட்சிக்குள் ஒரு கட்சியாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு குழுவால் எடுக்கப்பட்டு 1958 ஜனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பயனாக ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு விதமாகத் தமிழ் எழுத்து பொறிக்கப்பட்டது. இந்தச் சிறுபிள்ளைத்தனத்திற்கு நாடும் தமிழரும் கொடுத்த விலை பெரிது.

இக்காலப்பகுதியில் பண்டாரநாயக்க மீது செலுத்தப்பட்ட பேரினவாத அழுத்தங்கள் வலுத்தன. பண்டாரநாயக்கவை ஆட்சிக்குக் கொண்டுவரப் பிரசாரம் செய்த பிக்குமாரின் நெருக்குவாரத்தின் முன் பணிந்துபோன பண்டாரநாயக்க பண்டா-செல்வா உடன்படிக்கையைச் செல்லுபடியற்றதாக்குவதாக அறிவித்தார். இது சுதந்திர இலங்கையில் பிக்குமாரின் முதலாவது அரசியல் தலையீடு என்று கொள்ளத்தக்களவு முக்கியமானது. இதைத் தொடர்ந்தே தேசிய அரசியலில் பிக்குகளின் தலையீடும் செல்வாக்கும் அதிகரிக்கத் தொடங்கின. ஆட்சியிலும் நிர்வாகத்திலும் கொள்கை முடிவுகளிலும் இறுதியான தாக்கத்தைச் செலுத்த முடியும் என்று பிக்குகள் நம்பத் தொடங்கியது பண்டா-செல்வா உடன்படிக்கையை வெற்றிகரமாக வறிதாக்கியதன் பின்பே, இது இலங்கை அரசியல் எதிர்காலத்திற்குத் தவறான ஒரு முன்னுதாரணத்தைக் கொடுத்தது.

இந்த உடன்படிக்கையின் முடிவில் தாக்கம் செலுத்திய காரணிகளில் முதன்மையானது பண்டாரநாயக்கவின் உறுதியின்மை. அவரது அரசாங்கத்திற்குள் இவ்வுடன்படிக்கைக்கு குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு இருந்தது. இதை நடைமுறைப்படுத்தி இதை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுக்க பண்டாரநாயக்கவின் மக்கள் ஐக்கிய முன்னணியில் ஜனநாயக, முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள் தயாராகவே இருந்தார். ஆனால், நாட்டின் எதிர்காலத்தை விட தனது அரசியல் அதிகாரம் மீது பண்டாரநாயக்கவின் அக்கறை இருந்தது. மறுபுறத் தமிழரசுக் கட்சியின் பொறுப்பற்ற நடத்தையும் பங்களித்தது எனலாம்.

CEYLON என்ற பெயரில் இருந்த ஆங்கில எழுத்துகளில் O தவிர்ந்த ஏனைய இரண்டு எழுத்துக்களைக் கொண்டே வாகனங்களுக்கு இலக்கமிடும் முறை நடைமுறையில் இருந்தது. இவ்வகையில் CE எழுத்துக்கள் முடிவுக்கு வந்த நிலையில், அரசாங்கம் ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலான ஸ்ரீலங்காவில் உள்ள ஸ்ரீ என்ற சிங்கள எழுத்தை வாகன இலக்கத் தகடுகளில் பயன்படுத்த முடிவு செய்தது. இங்கு இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தும் முறையைத் தொடர்ந்திருக்க முடியும், ஏனெனில் இன்னும் சில ஆண்டுகளுக்கு மிகுதி ஆங்கில இலக்கக் கலவைகளுடன் வாகனங்களுக்கு இலக்கங்களை வழங்கியிருக்கலாம். ஆனால், அதற்கு அப்பால் என்ன செய்வது என்பது குறித்து ஆழமாக யோசிக்கவில்லை. இரண்டாவது தனிச்சிங்களச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு சில காலத்திலேயே ஸ்ரீ எழுத்தைப் பாவிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது, இயல்பான கோபாவாசத்தை தமிழர்களிடையே ஏற்படுத்தியது.

இதற்கான எதிர்ப்பை வெகுஜனத் தளத்தில் முன்னெடுப்பதற்கான பல வாய்ப்புகள் இருந்தன. ஆனால், உணர்வுபூர்வமான மனநிலையில் சரியான முடிவுகள் எட்டப்படுதல் மிகக்குறைவு. அதேபோலவே இவ்விடயத்திலும் நடந்தது. தமிழரசுக் கட்சி இலக்கத்தகடுகளில் ஸ்ரீ அறிமுகம் செய்யப்பட்டமையானது தமிழ்மொழியை ஒழிக்கும் நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதி என்று தவறுதலாக விளக்கியது. உணர்வுப்பூர்வமான தமிழ் மக்கள் ஆதரவுக்கு இது உதவியதே தவிர இது மக்களின் மொழி உரிமைக்கான போராட்டத்தின் பகுதியாகவில்லை.

மறுபுறம் தமிழர்களைத் தூண்டிவிட்டு அரசியல் நடத்தும் பணியையே அரசாங்கம் முன்னெடுத்தது. இனங்களுக்கிடையிலான உறவை சீர்குலைப்பதன் CL அரசியல் இலாபம் காண்பது தேசியவாதிகளின் நோக்காக இருந்தது. மறுபுறம் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தை வெறுமனே ஒரு இனவாதக் கண்ணோட்டத்திலேயே தமிழரசுக் கட்சி நடத்தியது. இதனால் சிங்கள மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி குறித்த எதிர்மறையான சிந்தனைகள் கிளம்பத் தொடங்கின. இது குறித்து தமிழரசுக் கட்சி அக்கறை கொள்ளவில்லை. ஆனால், இவ்வகையான ஒரு எதிர்பபுணர்வு தோற்றம் பெற்றமைக்கான பொறுப்பு அரசாங்கத்தினுடையது என்பது மறுக்கப்பட முடியாதது.

ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தைத் தமிழரசுக் கட்சி நடத்திய விதம் இங்குக் கவனிக்கத்தக்கது. ஒரு பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சியாகச் செயற்படத் தவறிய முக்கிய சந்தர்ப்பம் இது. சிறுபிள்ளைத்தனமான அரசியல் நடத்தைகளின் CL தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை அஸ்தமிக்க வைக்கும் எண்ணற்ற செயல்களைத் தமிழரசுக் கட்சி செய்துள்ளது. அதில் முன்னோடியான நிகழ்வுகளில் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் தலையாயது. ஸ்ரீ எதிர்ப்பு போராட்டத்தை நடத்துவது பற்றி தமிழரசுக் கட்சியின் செயற்குழுவோ அல்லது பாராளுமன்ற குழுவோ முடிவு செய்யவில்லை. இதை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்று யாருக்கும் தெளிவான நிலைப்பாடு இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் சில தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் எடுத்த முடிவையொட்டி யாழ்ப்பாணத்தில் இலக்கத் தகடுகளில் இருந்த ஸ்ரீ எழுத்துக்குப் பதிலாகத் தமிழின் ஸ்ரீ எழுத்து (உண்மையில் வடமொழி) பதிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ஆதரவும் ஆசீர்வாதமும் கொடுத்தவர் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். யாழ்ப்பாணத்திற்கு வெளியே இப்போராட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் சிங்கள ஸ்ரீ எழுத்து இருந்த இடத்தில் அதற்குப் பதிலாகத் தமிழில் ஸ்ரீ எழுத்து பொறிக்கப்பட்டது. மன்னாரில் சிங்கள ஸ்ரீ எழுத்துக்குப் பக்கத்தில் தமிழ் ஸ்ரீ எழுத்து சேர்க்கப்பட்டது. இன்னும் சில இடங்களில் மும்மொழிகளிலும் ஸ்ரீ என்ற எழுத்து பொறிக்கப்பட்டது. கிழக்கில் இதற்குப் போதிய ஆதரவு இருக்கவில்லை. மன்னாரிலும் இப்போராட்டம் வெற்றி பெறவில்லை. சாதாரண மக்களிடம் இருந்தவை மிஞ்சிப் போனால் சைக்கிள்களே. ரிக்சாக்களும், மாட்டுவண்டிகளும் இலக்கத் தகடுகள் இல்லாமலே ஓடியதால் அவையும் போராட்ட இயக்கத்தில் இறங்க முடியவில்லை. எனவே, போராட்டம், தொடங்கியதிலும் வேகமாக முடிவுக்கு வந்தது. அரசாங்கத்தின் சட்ட ரீதியான பொறுப்பை நிறைவேற்றும் தேவை கருதிப் பொலிஸார் வாகன இலக்கத் தகடுகளைச் சேதமாக்கிய குற்றத்திற்காகப் போராட்டத்தில் பங்குபற்றியவர்கள் கைதாகி விடுதலையாகினர். சிங்கள ஸ்ரீ இலக்கம் பொறித்த வாகனங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்பதும் தமிழரசுக் கட்சியின் உணர்வுபூர்வமான பிரசாரமாக இருந்தது. இதனால் நீண்டகாலத்திற்கு புதிய வாகனங்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவில்லை. குறிப்பாக புதிய அரச பஸ்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவில்லை. பழைய ஆங்கில எழுத்துப் பதித்த பஸ்களிலேயே சாதாரண மக்கள் நீண்டகாலம் பயணம் செய்ய நேர்ந்தது.

படுதோல்வியில் முடிந்த ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் பற்றி ஒரு சுயவிமர்சனத்தைத் தமிழரசுக் கட்சி மேற்கொள்ளவில்லை. இதனால் தொடர்ந்து ஏற்படப் போகும் மிக மோசமான தோல்விகளுக்கு இது கட்டியங் கூறியது. ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் ஒரு பயனற்ற அல்லது தவறான போராட்டம் என்பதை இன்றுவரை தமிழரசுக் கட்சி ஏற்கவில்லை. அது போக, அது தோல்வியடைந்து விட்டது என்ற உண்மையை ஏற்கவும் அவர்களுக்கு நீண்ட காலம் எடுத்தது. தென்னிலங்கையில் இது ஏற்படுத்திய உணர்வு பற்றி தமிழரசுக் கட்சி அக்கறை கொள்ளவில்லை. தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்களது தொழிலையும், சொத்துக்களையும் சிதைக்கவும், பறிக்கவும் காத்திருந்த ஒரு சிங்கள இனவாத முதலாளித்துவக் கும்பலுக்கும் ஸ்ரீ எதிர்ப்பு போன்ற செயல்கள் வசதி செய்தன. தென்னிலங்கையில் பெயர்ப் பலகையின் தமிழைத் தார் பூசி அழிக்கும் இயக்கத்தின் தொடர்ச்சியாகவே தமிழர் மீது 1958இல் வன்முறை தொடங்கியது.

## கடிதங்கள்

### கூட்டமாக சுற்றித்திரியும் காட்டுப்பன்றிகளால் அச்சம்

மஸ்கெலியா-நல்லத்தண்ணிய நகரில் பகல் நேரங்களில் கூட்டம் கூட்டமாக சுற்றித்திரியும் காட்டுப்பன்றிகளால் பாடசாலை மாணவர்கள் மற்றும் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

இந்த காட்டுப் பன்றிகளில் பெரிய காட்டுப் பன்றிகளும் இருப்பதாகவும் அப் பன்றிகள், உணவுகளை தேடி பகல் வேளையில் நகர் பகுதியில் சுற்றித் திரிவதாகவும் நகர மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலை வேளையில் பாடசாலை மாணவர்கள் செல்லும் வீதிகளிலும் கூட்டமாக சுற்றித்திரியும் இந்த காட்டு பன்றிகளால் தங்களுடைய பிள்ளைகள் அச்சமடைந்துள்ளதாகவும், பயந்துபோன சில பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாமல் வீடு திரும்புவதாகவும் கூறுகின்றனர்.

ஆகையால், பகல்வேளைகளில் சுற்றித்திரியும் காட்டுப்பன்றிகள் மற்றும் அவற்றின் குட்டிகளை, காடுகளுக்கு திருப்பி விரட்டிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அச்சத்தில் உள்ள மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

காமினி பண்டார இளங்கந்திலக



# NYC உடன் SHMA கைகோர்ப்பு



விருந்தோம்பல் துறையில் நாளையை தலைவர்களை நிலைநிறுத்தச் செய்யும் குறிக்கோளுடன் அவர்களின் திறன்கள் மற்றும் திறமைகளை கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையின் இளைஞர்களை ஊக்குவித்து அவர்களை வலுவூட்டும் நோக்குடன், ஏ.பவர் அன்ட் கம்பனி பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் சுவிஸ் ஹோட்டல் மனேஜ்மன்ட் அகடமி பிரைவட் லிமிடெட் (SHMA), இலங்கை தேசிய இளைஞர் படையணியுடன் (NYC) புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் அண்மையில் கைச்சாத்திட்டது.

விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தேசிய இளைஞர் படையணி, நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) செயற்திட்டத்தின் பயிற்றுவிக்கும் பங்காளராக இயங்கும். இந்த செயற்திட்டம், பவர் மற்றும் அபிவிருத்தி மற்றும் ஒன்றிணைவுக்கான சுவிஸ் முகவர் (SDC) அமைப்பு, சுவிட்ஸர்லாந்தின் வெளி விவகார செயற்பாடுகளுக்கான சர்வதேச ஒன்றிணைவுக்கான பெடரல் திணைக்களம் ஆகியவற்றுக்கிடையிலான அரச மற்றும் தனியார் துறை பங்காண்மையாக அமைந்துள்ளது.

2002ஆம் ஆண்டு முதல் இளைஞர் அபிவிருத்திக்காக அர்ப்பணிக்கப்பட்ட அரச ஸ்தாபனமாக NYC திகழ்வதுடன், நாடு முழுவதிலும் 58 பயிற்சி நிலையங்களைக் கொண்டுள்ளது. தனது பிரத்தியேகமான பயிற்சி மாதிரிகளினூடாக இளைஞர்களை ஊக்குவித்து, வழிநடத்தி, தயார்ப்படுத்தி அவர்களுக்கு அவசியமான மென் திறன், கல்விசார், தொழிற்பயிற்சி, பொழுதுபோக்கு மற்றும் சமூக அடிப்படையிலான பயிற்சிகளை வழங்குகின்றது. 2014ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட தம்புளையிலுள்ள La Hotelier என்பதை NYC நிர்வகிப்பதுடன், இந்த பெருமைக்குரிய ஹோட்டல் பாடசாலையில் பயின்ற பல பட்டதாரிகள் இலங்கையின் முன்னணி ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கேட்போர்கூடத்தில் ஒக்டோபர் 17ஆம் திகதி இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. SHMA மற்றும் பவர் சார்பாக அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி/ முகாமைத்துவ பணிப்பாளர் ரொல்ஃப் பிளாசர், நிதியியல் மற்றும் ஒழுக்கச் செயற்பாடுகள் பணிப்பாளர் பவித்ரா சமரசிங்க, கல்வி மற்றும் சுற்றுலா பொது முகாமையாளர் டனியெலா முனசிங்க, SHMA முகாமையாளர் சுரீகா பெர்னான்டோ, செயற்திட்ட தலைவர் செரில் ஆர்ன்ட் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். NYC இலிருந்து அதன் பணிப்பாளர் பிரிகேடியர் சுஜீவ ரத்நாயக்க, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான மேலதிக பணிப்பாளர் சமன் குலசூரிய, மத்திய மாகாண பணிப்பாளர் மேஜர். அசோக விஜேரட்ன மற்றும் அபிவிருத்திக்கான உதவி பணிப்பாளர் இனோகா குணவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கௌரவ அமைச்சர் ரொஷான் ரணசிங்க உடன் இலங்கையிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பிரதி தலைவர் ஒலிவர் பிராஸ் மற்றும் முதல் செயலாளர் டொரிஸ் மேனர் கலந்து கொண்டனர்.

SLT குழுமம் மூன்றாம் காலாண்டில்

## மிதமான நிதிசார் வளர்ச்சியை பதிவு



Janaka R. Abeysinghe

2023 செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த மூன்றாம் காலாண்டு பகுதிக்கான நிதிப் பெறுபேறுகளை SLT குழுமம் வெளியிட்டுள்ளது. இதில், மிதமான நிதிசார் வளர்ச்சி பதிவாகியுள்ளது. SLT PLC வருமானம் ரூ. 17,490 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது 3.7% வளர்ச்சியடைந்திருந்தது. மொபிடெல் 2022 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2.7% சரிவை பதிவு செய்திருந்தது.

காலாண்டில் குழுமத்தின் மொத்த வருமானம் 3.9% இனால் அதிகரித்து ரூ. 27.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. இப்பெறுமதி 2022 மூன்றாம் காலாண்டில் ரூ. 26.7 பில்லியனாக காணப்பட்டது. SLT PLC வருமான வளர்ச்சியில் புரோட்பான்ட் (Broadband), PEOTV மற்றும் நிறுவனசார் தீர்வுகள் (Enterprise Business) வருமான மூலங்கள் பங்களிப்பு செய்திருந்தன. மூன்றாம் காலாண்டில், மொபிடெல் தொடர்ச்சியாக சில காலாண்டுகளில் சரிவை பதிவு செய்திருந்ததை தொடர்ந்து, வளர்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் மூன்றாம் காலாண்டில் 3% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

2022 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், SLT குழுமத்தின் தொழிற்பாட்டு செலவு (Opex) நடப்பு ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 13.3% இனால் அதிகரித்து ரூ. 19.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. SLT இன் தொழிற்பாட்டு செலவு அதிகரிப்பில் பிரதானமாக, மின்சார கட்டண அதிகரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் அதிகரிப்பு போன்றன பங்களிப்புச் செய்திருந்தன. வருமானத்தில் வளர்ச்சி பதிவாகியிருந்த போதிலும், அதிகரித்த செலவுகளினால், SLT இன் இலாபத்தில் தாக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

2023 செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில், SLT குழுமத்தின் தொழிற்பாட்டு செலவு (Opex) ரூ. 57 பில்லியனாகும். கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதி 49.6 பில்லியனாக காணப்பட்டதுடன், 14.9% அதிகரிப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அணகி கணக்கு வாடிக்கையாளர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்தார்





இலங்கைக்கு விஜயம் செய்துள்ள உலக வங்கியின் செயற்பாட்டுப் பிரிவு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா ஜேர்டி அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். இந்த விஜயத்தின்போது அவர் கொமர்ஷல் வங்கியின் அணகி மகளிர் கணக்கின் மூலம் ஆதரவு பெறும் பெண் தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகள் மற்றும் சேவைகளால் பெரிதும் கவரப்பட்டார். அணகி வாடிக்கையாளர் குழுவொன்றையும் அவர் சந்தித்தார். உலக வங்கி அதிகாரிகள், சர்வதேச நிதி கூட்டுத்தாபனத்தின் (IFC) இலங்கைக்கான வதிவிட பொறுப்பாளர், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக் கூட்டுத்தாபனம் (JICA), சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவராண்மை (USAID) ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) எனபனவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய வட்டமேசை கலந்துரையாடல் ஒன்று இங்கு இடம்பெற்றது. அணகி வங்கிக் கணக்கின் முன்னேற்றம் குறித்த மீளாய்வும் இடம்பெற்றது. IFC உடனான IFC-DFAT திட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொமர்ஷல் வங்கியால் தொடங்கப்பட்ட அணகி கணக்கின் மூலமான மகளிர் வேலைத் திட்டங்கள் பற்றி இங்கு விரிவாக ஆராயப்பட்டது. இந்த சந்திப்பின் பின் பெண் தொழில்முயற்சியாளர்களின் திடசங்கற்பம் மற்றும் ஆர்வம் என்பனவற்றைப் பாராட்டி அனா ஜேர்டி டுவிட்டர் பதிவொன்றையும் வெளியிட்டிருந்தார்.

கொமர்ஷல் வங்கியின் மகளிருக்கான அணகி வங்கிக் கணக்கானது ‘அணகி மகளிருக்கான சேமிப்புக் கணக்கு’ முதலீட்டு நோக்கம் அல்லது உழைக்கும் மூலதனத்துக்காக சிறிய மற்றும் நடுத்தர மகளிர் தொழில்முயற்சியாளர்களுக்கான அணகி வர்த்தக கடன் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். மாஸ்டர் கார்ட்டின் மூலம் தங்கம் மற்றும் பிளேட்டினம் வகைப்படுத்தலின் கீழான அணகி முத்திரையுடன் கூடிய கிரடிட் கார்ட்கள் என்பனவும் வங்கியால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவை மகளிருக்கென பிரத்தியேகமான பல அனுகூலங்களை உள்ளடக்கியுள்ளன.

படத்தில் கொமர்ஷல் வங்கி அணகி வாடிக்கையாளர் குழுவுடன் உலக வங்கியின் செயற்பாட்டுப் பிரிவு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா ஜேர்டி யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார். IFC, JICA, USAID, ADB பிரதிநிதிகளும் படத்தில் காணப்படுகின்றனர்.


## உறவுகள்

இதயங்கள் பல பிணையும்
பாலப்பிணைப்பு அது,
ஆதி உறவின் இலக்கணம்
அது எதிலும் புரியாது...
அது கருவறை உறவு
இருட்டறையில் யாரென்று
தெரியாத உறவு
தாய் சேய் பிணைப்பு
உறவு தாலாட்டுப்பாடலுடன்
சேயும் கண்டது முதல் உறவு...
தோள் மீது சுமந்திடும்
தோழமையான தந்தை
உறவு இன்னும் பல உறவுகள்
இணைந்து கொள்ளும்
வாழ்வினில் உறவுகளின்
மேன்மை அது எதிலும் நிகரில்லை
கூடியிருக்கும் போது
உறவின் அர்த்தம் தெரியாது
உனக்கு பின் சில உறவுகள்
சிதைந்தும் தொலைந்ததுவே!
தேடிப்பார்த்து புரிந்து கொள்
கண் முன்னே செதுக்கி நின்ற
உறவு கல்லறை சென்றது...

ஆஷா அனிஸ்டன்



## விஞ்ஞான விபரீதம்




நடையெல்லாம் நின்னாச்சு
நலிதேகம் நோயாச்சு
விடைகாணா விபரீதம்
விஞ்ஞானம் தந்தாச்சு...
உணவெல்லாம் நஞ்சாச்சு
உயிரில்லா விதையாச்சு
கணமேனும் ஓய்வில்லாக்
கடிகார வாழ்வாச்சு...
உரையாடல் தொலைவாச்சு
உள்ளங்கள் இலதாச்சு
கரையில்லா இணையங்கள்
காட்டுவதே வழியாச்சு...
உடலுழைப்பு மறந்தாச்சு
உறுநோய்கள் பலவாச்சு
திடமாக வாழ்வதற்குத்
தினத்தேவை மருந்தாச்சு...
நிம்மதியும் குறைஞ்சாச்சு
நேர்வழிகள் நலிஞ்சாச்சு
செய்ம்மதிகள் பறப்பதனால்
செகமெங்கும் அலையாச்சு...
மனிதங்கள் மறைஞ்சாச்சு
மமதைதான் உறவாச்சு
புனிதங்கள் தமையிழந்த
பூமியிது
என்றாச்சே...



கந்தவனம் கோணேஸ்வரன்.

## ஆழ்மன அங்கலாய்ப்பு...!

நம்ம நாடு சுபீட்சத்தை நோக்கி...
நமக்கென்ன குறைச்சல்...
வீடெல்லாம் விளை பொருட்கள்
வேண்டிய வேண்டாப்
பொருட்களெல்லாம் குவிந்து கிடக்கின்றன...
தட்டுப்பாடு என்ற சொல்லுக்கே
தட்டுப்பாடு.
இல்லையென்ற சொல்லே
இல்லையாகி...
சிங்கப்பூரே எமது ஊர்களைப் பார்த்து
புரவமுயர்த்துகின்ற வகையில்
நாமெல்லாம் சுபீட்சத்தின் உச்சியில்
சுரண்டல்கள் ஊழல்கள்
அடாவடிகள் ஆக்கிரமிப்புக்கள்
மனிதர்களை விரட்டும்
புனிதபூமிப் பிரகடனங்கள்
எதுவுமேயற்ற
சமாதான பூமியாய்
இத்தனை வேகமாய் எமது நாட்டில்
இப்படியோர் எண்ணிப்பார்க்கமுடியா
மாற்றத்தின் பாய்ச்சல்...
இனங்களெல்லாம் ஒற்றுமையாய்
கைகோர்த்து சோதரராய்
எமது சுந்தர சுதந்திர நாட்டில்
எத்தனை ஆனந்தமாய்
உரத்து உற்சாகமாக
எல்லோருடனும் இணைந்து
எனது உதடுகளும் சுதந்திர
கீதத்தை உரத்து உச்சரிக்க...
‘மகன் எழும்படா ...என்னடா சத்தமாய்’
அம்மாவின் குரல் அதிர்வில்
என் அதிகாலை உறக்கத்தில் திடீர் விழிப்பு...
அட கனவின் நிழல்களா
கண்ட கனவெல்லாம் நனவாகுமா
என்ற ஓர் ஏக்கத்தில்
நாட்கள் நகருகின்றன
மிரட்டல்களின்
மெத்தனத்தில்!



ஷெல்லிதாசன்தி ருகோணமலை





## நாணயம்

இரு பக்கங்களை
தவிர்க்க விரும்பினோம்...
நான் சந்தோசமென்ற
கல்லை எறிகிறேன்
அவள் கவலை என்ற
பறவையினை பறக்க விடுகிறாள்...
ஓர் இரவு விடுதியில்
இத்தனையும் நடந்தன
அவரவர் நினைவுகள்
அவரவர் பாதையில்...
விடிந்தது
நான் சந்தோசமற்ற
சந்தோசத்திலும்
அவள் கவலையற்ற
கவலையிலுமிருந்தோம்...
மீண்டும் இரவுக்கென
காத்திருக்கிறோம்...
இக்கால இருமையிலிருந்து
வேறொன்றுக்காய்.
வேறொன்றுமில்லை...

லலித்தா








# மல்லிகை செந்தூரனின் ‘காதல் சிறகினிலே’

■ அஸ்ஹர் இப்றாஹிம்

மல்லிகை செந்தூரனின் ‘காதல் சிறகினிலே’ நூல் வெளியீடு மல்லிகைத்தீவு மகா வித்தியாலயத்தில் நூலாசிரியர் மாமா பன்னூல் எழுத்தாளர் கனகசபை தேவகதாட்சம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இரா.கிருபைராஜா கலந்து சிறப்பித்தார்.

நூலாசிரியர் மல்லிகை செந்தூரனின் ‘காதல் சிறகினிலே’ கவிதை நூல் அவரின் கன்னி நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் மூதூர் ஜே.எம்.ஐ. நிறுவனத்தின் இம்மாதம் வெளியீடாக வெளிவந்துள்ளது.







# உறவுகள் சொல்லும் உணர்வு சிறுகதை

■ அ . அச்சுதன்

கதிர்.திருச்செல்வத்தின் “உறவுகள் சொல்லும் உணர்வு” சிறுகதை நூல் அறிமுக விழா கவிஞர் க.யோகானந்தன் தலைமையில் திருகோணமலை, கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (15 ) நடைபெற்றது.

நூல் அறிமுகத்தை மாகாண கல்வி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் ஏ.சி.எம்.முஸ்ஸில் நிகழ்த்தினார்.

முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் கலந்து கொண்டார்.

நூலின் முதல் பிரதியை அதிபர் திருமதி யு.சுஜந்தினி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் வழங்கி வெளியீட்டு வைத்தார்.









# கிழக்கில் சிவந்த சுவடுகள் அறிமுக விழா

■ அ . அச்சுதன்

கிழக்கில் சிவந்த சுவடுகள் அறிமுக விழா எழுத்தாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமலை நவம் தலைமையில் திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் சனிக்கிழமை (11) இடம்பெற்றது.

அன்பின்னர் பாதையின் எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைப்பின் தலைவர் கனக. தீபகாந்தன் வரவேற்புரை வழங்கினார்.

கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சரான சி.தண்டாயுதபாணி முதன்மை விருந்தினராகவும் மூத்த எழுத்தாளர் க.தேவகடாட்சம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.













# பேரிகை நூல் வெளியீடு

மாத்தளை கனேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தின் பேரிகை நூல் வெளியீடும் மாபெரும் கலை நிகழ்வும் பாடசாலை அதிபர் ரஞ்சித் தலைமையில் வெள்ளிக்கிழமை (17) நடைப்பெற்றது.






































பீஜிங்

# குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா

சீனாவில் குழந்தைகளை அச்சுறுத்தும் நிமோனியா தொற்று வேகமாகப் பரவி வருவதால் அது குறித்து அந்நாட்டு சுகாதாரத் துறை தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. மேலும், இந்த நிமோனியா தொற்று தொடர்பான தகவல்களைப் பகிரும்படி அந்நாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.


ஊடகச் செய்திகளின்படி, சீன மருத்துவமனைகளில் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்கு அழைத்துவரப்படும் போக்கு அதிகரித்துள்ளது. குழந்தைகள் அனைவருமே சுவாசக் கோளாறுடனேயே அழைத்து வரப்படுகின்றனர் என்றும் அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.



இது தொடர்பாக நவம்பர் 12இல் சீன தேசிய சுகாதார ஆணையம் செய்தியாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. அதில், கொரோனா கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதன் எதிரொலியாகவே இந்தப் புதிய தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

2019ஆம் ஆண்டு டிசெம்பரில் சீனாவில் பரவிய கொவிட்-19 தொற்றின் காரணமாக உலகம் முழுவதும் பல இலட்சம் பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தற்போது பரவும் மர்ம நிமோனியா தொற்று உலக நாடுகளைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.



## கார் வெடித்ததில் இருவர் பலி

அமெரிக்கா - கனடாவிற்கு இடையே காணப்படும் நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள ரெயின்போ பாலம் உள்ளது. இந்த ரெயின்போ பாலம் ஒன்டாரியோவை நியூயோர்க்குடன் இணைக்கும் 4 எல்லைக் கடப்புகளில் ஒன்றாகும்.

இந்நிலையில், நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள அமெரிக்கா-கனடா எல்லை சோதனைச் சாவடியில் காரொன்று புதன்கிழமை (23) திடீரென வெடித்ததில் 2 பேர் பலியாகினர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாலத்தின் எல்லையில் ஒரு வாகனம் வெடித்த சம்பவம் 'பயங்கரவாத தாக்குதல்' முயற்சியாக இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல்

## "வெள்ளிக்கு முன் விடமாட்டோம்"

பிணைக் கைதிகளை விடுவிக்க ஏதுவாக, 4 நாட்களுக்கு போரை நிறுத்துவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்தது சர்வதேச அளவில் கவனம் பெற்றது.

அதோடு, 50 பிணைக் கைதிகள் விடுவிக்கப்படும் அதேவேளையில், இஸ்ரேல் சிறையில் இருந்து 150 பலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தகவல் வெளியானது.

பிணைக்கைதிகளை விடுவிக்கும் பணி தொடங்கலாம் என்று தகவல் வெளியாகியிருந்த நிலையில், ஹமாஸ் அமைப்பினரிடம் இருக்கும் பிணைக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இஸ்ரேல் புதிய தகவலை வெளியிட்டுள்ளது.



இது தொடர்பாக இஸ்ரேல் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டாச்சி ஹானெக்பி கூறுகையில், "இஸ்ரேல் -ஹமாஸ் போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஆனால், பிணைக்கைதிகளின் விடுதலை என்பது வெள்ளிக்கிழமைக்கு (24) முன்பாக நடைபெறாது. இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பு இடையேயான ஒப்பந்தத்தின்படி பிணைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்" என்று தெரிவித்துள்ளார்.



இந்தியா

## விவாகரத்து கோரிய மனைவிக்கு அரிவாள் வெட்டு

இந்தியாவில் விவாகரத்து கேட்டு மனைவி நீதிமன்றுக்கு சென்றதால் கணவனால் வெட்டி கடுங்காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் சித்ரதுர்கா மாவட்டம் செல்லகெரேவில் கணவனால் (30) கொடுமைப்படுத்தப்பட்டு வந்த பெண் (26) கணவரைப் பிரிந்து தாய் வீட்டுக்குச் சென்று விவாகரத்து கோரி செல்லகெரே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

மனு தொடர்பாக, புதன்கிழமை (22) திகதி விசாரணை நடைபெறவிருந்த நிலையில், இருவரும் நீதிமன்றுக்கு வருகை தந்துள்ளனர்.

தன் விருப்பத்துக்கு மாறாக, விவாகரத்து கேட்டு நீதிமன்றத்துக்குச் சென்ற மனைவியைக் கண்ட, கணவர் வீதியோர இளநீர் விற்பவரின் கையிலிருந்த அரிவாளைப் பிடுங்கி, மனைவியை வெட்டியுள்ளார்.

இதைக் கண்ட அப்பகுதியினர் குறித்த நபரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதோடு, தாக்குதலுக்கு உள்ளான பெண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெலுங்கானா

## உலகின் முதலாவது 3-D பிரிண்டிங் கோவில்

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத், சித்திபேட்டை மாவட்டத்தில் உள்ள புருகுபள்ளியில் 3டி வடிவமைப்பில் கோவிலை (3D- printed temple) கட்டியுள்ளனர். இது 3டி வடிவமைப்பில் உருவான உலகின் முதல் கோவிலாகும். 4 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 35.5 அடி உயரம் கொண்ட 3 கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொழுக்கட்டை வடிவில் விநாயகருக்கு ஒரு கருவறையும், சதுர வடிவில் சிவபெருமானுக்கு ஒரு கருவறையும், தாமரை மலர் போன்ற வடிவில் பார்வதி தேவிக்கு ஒரு கருவறையும் என 3 கருவறைகள் அமைத்துள்ளனர்.

**"3டி வடிவமைப்பில் உருவான உலகின் முதல் கோவிலானது 4 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 35.5 அடி உயரம் கொண்ட 3 கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன**

3 கோபுரங்கள் மற்றும் 3 கருவறைகள் 3டி பிரிண்டிங் ரோபோடிக் கட்டுமான வசதியுடன் உள்நாட்டு பொருட்கள் பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளன. மேலும், பில்லர்கள், பலகைகள் மற்றும் தரைகள் வழக்கமான கட்டுமான நுட்பங்கள் கொண்டு கட்டப்பட்டுள்ளன. மழை, பனி, நிலநடுக்கம் என எந்த வகையான இயற்கை சீற்றத்தையும் தாங்கக்கூடிய வகையில் இந்த கோவில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தலைமை இயக்க அதிகாரி தெரிவித்துள்ளார்.



இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில்

# முடிவுக்கு வந்த றோஹித்தின் பயணம்?




இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் பயணம் முடிவுக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னரே இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் தன்னைக் கருத்திற்கொள்ளா விட்டால் பருவாயில்லை என 36 வயதான ஷர்மா தெரிவித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

அந்தவகையில், அடுத்தாண்டில் இந்தியாவுக்கு ஆறு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளே உள்ள நிலையில், வெளிநாடுகளிலே பெரும்பாலும் டெஸ்ட் போட்டிகள் உள்ள நிலையில், இளம் அணித்தலைவர் ஒருவரை தயார்படுத்த ஷர்மா உதவுவார் எனப்படுகிறது.

இறுதியாக இருபதுக்கு-20 உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியிலேயே கடந்தாண்டு ஷர்மா விளையாடியிருந்தார். 148 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 3,853 ஓட்டங்களை ஷர்மா பெற்றிருந்தார்.

எஸ்.எஸ்.சியின் தெரிவுப் போட்டியில்

## களமிறங்கிய மன்னார் வீராங்கனை சஜந்தினி




**"மன்னார் மாவட்டம் சார்பாக ஒரு முதல்தர கழகத்தில் விளையாடிய முதல் கிரிக்கெட் வீராங்கனையாக சஜந்தினி சாதனை படைத்துள்ளதுடன், மற்றுமொரு வீராங்கனையான சலோமியும் உள்வாங்கப்பட்டுள்ளார்**

■ *அஸ்ஹர் இப்றாஹீம்*

இலங்கையின் முன்னணிக் கழகமான எஸ்.எஸ்.சியின் தெரிவுப் போட்டியில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த வீராங்கனை சஜந்தினி களமிறக்கப்பட்டார்.

குறித்த போட்டியில் அவர் 4 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இதன்மூலம் மன்னார் மாவட்டம் சார்பாக ஒரு முதல்தர கழகத்தில் விளையாடிய முதல் கிரிக்கெட் வீராங்கனையாக இவர் சாதனை படைத்துள்ளார்.

அத்தோடு, SSC எஸ்.எஸ்.சியின் முதல் 15 வீராங்கனைகளுக்குள் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த மற்றுமொரு வீராங்கனையான சலோமியும் உள்வாங்கப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் பேசாலை பற்றிமா பாடசாலையைச் சேர்ந்த வீராங்கனைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓட்டமாவடி பிரதேச கழகங்களுக்கு

## உபகரணங்கள் கையளிப்பு



■ *அஸ்ஹர் இப்றாஹீம்*

ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினரான எம்.எம்.ஹனிபாவின் அயராது முயற்சியால், விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் விளையாட்டுத்துறை அமைச்சில் வைத்து பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் ஓட்டமாவடி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

வளர்பிறை விளையாட்டுக் கழகம், நியூ ஸ்டார் விளையாட்டுக்கழகம், யங் சோல்ஜஸ் விளையாட்டுக் கழகம், சல்சபீல் விளையாட்டுக்கழகம், றோயல் விளையாட்டுக் கழகம் ஆகிய விளையாட்டுக் கழகங்களுக்கே இவ்வாறான பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சதுரங்கத்தில் வெற்றியீட்டிய

## கல்முனை அல் மிஸ்பாஹ் மாணவர் கௌரவிப்பு



■ *அஸ்ஹர் இப்றாஹீம்*

அம்பாறை மாவட்ட சதுரங்க சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட எப்.பாத்திமா இல்மா, ஸஹிரியன் மாஸ்டர் சதுரங்க சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்று வெற்றியீட்டிய எம்.அனாஹித் ஆகிய கல்முனை அல் மிஸ்பாஹ் மாணவரை பாராட்டி கௌரவிக்கும்



நிகழ்வானது, பாடசாலை அதிபர் அப்துல் றஸாக் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக

## இளையோர் அணி 36 ஓட்டங்களினால் வெற்றி

■ *அஸ்ஹர் இப்றாஹீம்*

சாய்ந்தமருது பிரதேசத்தில் இளையோரை கிரிக்கெட் துறையில் மேம்படுத்தும் வகையில், சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் கிரிக்கெட் பயிற்சிப் போட்டியொன்றினை கழக வீரர்களுக்கு இடையில் ஒழுங்கு செய்திருந்தது.

சாய்ந்தமருது பொலிவேரியன் பொது விளையாட்டு மைதானத்தில் 21 வயதுக்கு உட்பட்ட இளையோருக்கும், 17 வயதுக்கு உட்பட்ட இளையோருக்கும் இடையில் இக்கிரிக்கெட் போட்டி இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய 21 வயதுக்கு உட்பட்ட இளையோர் அணி 14 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 17 வயதுக்கு உட்பட்ட இளையோர் அணி 14 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 24 நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.